

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் வல்லரசு பார்வர்டு பிளாக் தலைவர் பி.என்.அம்மாசி சந்தித்து ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். அதுபோது அக்கட்சியின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### பாசிச பா.ஜ.க. ஆட்சியிடமிருந்து

# இந்தியாவின் பரந்துபட்ட பன்முக ஆன்மாவை மீட்போம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 16-**

**பாசிச பா.ஜ.க. ஆட்சியிடமிருந்து இந்தியாவின் பரந்துபட்ட ஆன்மாவை மீட்க ஒன்றிணைய உறுதி ஏற்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளம் பதிவிட்டுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

“2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதலே, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி இந்தியாவின் மதச்சார்பின்மைத் தன்மையைச் சீர்குலைத்து, சகிப்பின்மையை வளர்த்து, நமது இசுலாமிய சமூகத்தவருக்கு எதிரான பாகுபாட்டை ஊக்குவித்து வருகிறது. குடியுரிமைத் திருத்தச் சட்டம் போன்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் வழியாக இசுலாமியர் மீதான வெறுப்பைச் சட்டப்பூர்வமாக்க வழிவகுக்கிறது.

இசுலாமிய வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்கான பன்னாட்டு நாளில், பா.ஜ.க. ஆட்சியின் வகுப்புவாத பாசிசத்தை வேரறுத்து, அவர்களின் பிடியில் இருந்து இந்தியாவின் பரந்துபட்ட பன்முக ஆன்மாவை மீட்க ஒன்றிணைய உறுதியேற்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## குடியுரிமைச் சட்டம் –

# இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல - இந்துக்களுக்கே எதிரானது!

### “புதிய தலைமுறை” தொலைக்காட்சி ‘நேர்படப் பேசு’ விவாத நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி விமர்சனம்!

**‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியில், ‘அவசர கதியில் குடியுரிமைச் சட்டம், சந்தேகம் கிளப்பும் ஸ்டாலின், சி.ஏ.ஏ. திடீர் அமலுக்கு காரணம் என்ன?’ என்ற தலைப்பில் ‘நேர்படப் பேசு’ விவாத நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் இந்திர குமார் தேரடியின் விவாதம் வருமாறு:**

இதில் எதிர்க்கட்சிகள் விமர்சிக்கிறது என்பதைத் தாண்டி, சமீபத்தில் பி.ஜே.பி. வெளியிட்டுள்ள விளம்பரங்களை எல்லாம் பாருங்கள், மோடி ஒரு படகில் இருப்பதைப் போலவும், கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற இந்துக்களை எல்லாம் ‘வாருங்கள்’ என்று கரை சேர்த்து கூட்டி வருவதைப்போன்று ஒரு சித்திரத்தை உருவாக்கி இருப்பதைக் காணலாம். அவர்கள் கொண்டு வரக் கூடிய தோற்றம் என்னவென்றால் , ‘உலகில் இருக்கக் கூடிய எல்லா இந்துக்களுக்கும் நாங்கள் பாதுகாப்பு வழங்குகிறோம்.

இந்து மாக்கடலைச் சுற்றி இருக்கக் கூடிய அத்தனை நாடுகளிலிருந்தும் இந்துக்களாகிய இந்தியர்களை நாங்கள் உள்வாங்கப் போகிறோம்.’ அப்படி என்கின்ற ஒரு தோரணையை உருவாக்குவதற்கு அவர்கள் விரும்புகிறார்கள்.

இது எல்லாமே அரசியலுக்காகவா என்றால் ‘ஆமாம், எல்லாமே அரசியலுக்குத்தான்’ என்று ஒத்துக் கொள்கிறது, அதுதான் இந்த நாட்டுக்கு மக்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகம்.

ஒரு நாட்டில் சட்டம் இயற்றப்படுகிறது என்றால், சில சட்டங்கள் அரசியல் காரணங்களுக்காக ஏற்றப்படும், சில சட்டங்கள் சமூகக் காரணங்களுக்காக ஏற்றப்படும், சில சட்டங்கள் பொருளாதாரக் காரணங்களுக்காக ஏற்றப்படும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணங்கள் இருக்கும். இப்போ இந்தச் சட்டத்திற்கு என்ன சொல்கிறார்கள்?

ஆமாம், இது அரசியலுக்காகத்தான். இந்தச் சட்டம் ஓட்டு வங்கியைத் தரும் என்று சொல்கிறார்கள். இது இந்தியர்களுக்குச் செய்கின்ற துரோகம். ஒரு சட்டத்தினால் ஓட்டு வரும், அந்தச் சட்டத்தைப் போடுகிறேன் என்று சொல்வது இந்தியாவினுடைய, அரசியலமைப்பு சட்டம் வகுத்துக் கொடுத்து இருக்கின்ற அடிப்படை விழுமியங்களுக்கு எதிரானது. எவ்வளவு மோசமான ஒரு நிலைக்கு நாம் போய்க் கொண்டு இருக்கின்றோம். மனிதன் மனதில் இருக்கக் கூடிய அழுக்குகளையும், வக்கிரங்களையும், தோண்டிவிட்டு, நோண்டி அந்த நாற்றத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது பி.ஜே.பி.

இது இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல; இது இந்துக்களுக்கே எதிரானது. இங்கே இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மக்களாகிய அனைவருக்கும் மனதிலே ஒரு பதற்றம் இருக்கு. குடியுரிமை பற்றி தீர்மானம் செய்றாங்களாமே, என்னமோ நடக்குது என்று சொல்லி டீக்கடை வரைக்கும் மனசில் பயம் பரவிக் கிடக்கிறது.

இஸ்லாமியர்கள் அவ்வளவு பேரும் பயத்தோடு வாழ்கிறார்கள். ஜாமியா மில்லியா பல்கலைக் கழகத்தில் எந்த எதிர்க்கட்சிகள் போராட்டத்தை ஒருங்கிணைத்தது. டெல்லி பல்கலைக்கழகத்தில் எந்த எதிர்க்கட்சி போராட்டத்தை ஒருங்கிணைத்தது. இந்தியாமுழுவதும்நடைபெற்றசிறுபான்மையினர் போராட்டத்தை எந்த எதிர்க்கட்சி ஒருங்கிணைத்தது. எதிர்க்கட்சிகள் அந்த ஒருங்கிணைப்பைச் செய்யாமல் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டோடுதான் மக்கள் இயக்கங்கள் அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

**இந்திரகுமார் தேரடி**
ஊடகவியலாளர்



எதிர்க்கட்சிகள் இன்றைக்கு போராட்டத்திற்குப் போகாமல் அறிக்கைகளோடு நின்று விட்டார்கள் என்ற காரணத்தால்தான் மக்கள் தன்னெழுச்சியாக அந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அதில் இருப்பவர்கள் எல்லோரும் சாமானியர்கள். அந்த சாமானியர்களுடைய போராட்டம், இப்போது இங்கே வண்ணாரப்பேட்டையில் அந்தப் போராட்டம் நடைபெற்றது. இந்த சி.ஏ.ஏ. சட்டம் கொண்டு வந்த அன்று இரவே போராட்டம் வெடித்தது. அந்தப்போராட்டத்தில் அப்போது இருந்த அரசு கொடூரமான தாக்குதலை நடத்தியது. எந்த எதிர்க்கட்சி இந்தப் போராட்டத்தை ஒருங்கிணைத்தது. மக்கள் தாமாகப் பயந்து போய் அலறி அடித்துக் கொண்டு போய் ஓடி வந்தார்கள். அப்படி ஓடி வந்தவர்களை நோக்கி மோடி அரசு என்ன சொல்கிறது, “உங்களுக்கெல்லாம் எந்த பாதிப்பும் இல்லை, பயப்படாமல் இருங்கள்” என்று சொல்கிறார்கள்.

‘உண்மையிலேயே பாதிப்பு இல்லை’ என்பவர்கள், செயல்பாடுகள் மூலம் நிரூபிக்க வேண்டும். நேற்றைக்கு டெல்லியில் போலீஸ்காரர்கள், யார் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். ஒன்றிய உள்துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

ஒன்றிய உள்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய போலீசார், மசூதிக்குள் கூட்டமாக இருக்கிறது என்று அதற்கு வெளியே நின்று தொழுது கொண்டிருந்த இஸ்லாமியர்களை எட்டி மிதிக்கிறார்கள். கோவிலுக்கு வெளியே நின்று எத்தனையோ பேர் நின்று சாமி கும்பிட்டுக் கொண்டு இருக்கின்றார்களே அவர்களை அந்தப் போலீசார் எட்டி உதைக்க முடியுமா? இல்லை, அப்படி உதைத்தால் சரியா? ஆனால் இஸ்லாமியர்கள் ரோட்டில் நின்று தொழுகை செய்கிறார்கள் என்று அவர்களை எட்டி உதைக்கிறார்களே இது எந்த விதத்தில் சரியானது?

அப்படி இருக்கும் போது, இந்த நாட்டில் இஸ்லாமியர்கள் எப்படி பாதுகாப்போடு வாழ முடியும், எதிர்க்கட்சிகள் எப்படி அமைதியாக இருக்க முடியும்? இப்போது நடந்து கொண்டிருக்கின்ற பாலிடிக்ஸ்க்கு பிரதமர் மோடி வைத்திருக்கக் கூடிய பெயர் அப்பீஸ்மெண்ட் பாலிடிக்ஸ். (appeasement politics) அப்பீஸ் மெண்ட் என்றால் என்ன? state of being satisfied.

எல்லாவற்றையும் பெற்று விட்டோம் என்ற உணர்வில்லாமல் குறைந்த பட்சம் நிம்மதியாக இருக்கின்றோம் என்ற அந்த உணர்வைப் பெற வேண்டும் என்பது தான் அப்பீஸ் மெண்ட் என்பது. அது ஜனநாயகத்தினுடைய அடிப்படை.

பெரும்பான்மை இந்துக்களை அவர் அப்பீஸ் செய்ய வில்லை, பெரும்பான்மை இந்துக்களை அவர் அரகண்டா மாற்றுகிறார். இதனை வைலண்டா மாற்றுகிறார். அது தான் இன்றைக்கு மணிப்பூரில் நடைபெற்று வருகின்ற கலவரம். அது தான் குஜராத்தில் நடைபெற்ற கலவரம். அது தான் இன்றைக்கு இந்தியா முழுவதும் என்ன பிரச்சினை போய்கிட்டு இருக்கு. இந்தியாவில் என்றைக்கும் இல்லாத வகையில் வேலை வாய்ப்பின்மை பெருகிப்போய் இருக்கிறது.

2008 இல் 5.1 சதவிகிதமாக இருந்த வேலை வாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு 7.6 ஆக வந்து நிற்கிறது. இந்த வேலை வாய்ப்பின்மை அதிகரித்ததற்கு யார் காரணம்? யார் எடுத்த பொருளாதார நடவடிக்கைகள் காரணம்? மக்கள் எல்லாவற்றையும் தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வேலை இல்லாமல் நாம் சாலையில் நிற்பதற்கு காரணம் யார்? கேஸ் சிலிண்டர் வாங்க முடியாமல் மறுபடியும் விறகு அடுப்பிற்கு தள்ளியது யார்? கேஸ் அடுப்பு வாங்க முடியாமல் எல்லா வற்றுக்கும் ஜி.எஸ்.டி. வரி போட்டு நிறைச்சது யாரு, போடும் வரியையெல்லாம் சரியாக வாங்குகிறேன் என்று பீற்றிக் கொள்ளும் இந்த அரசு கார்ப்பரேட்களுக்கு வரிச்சலுகை செய்து கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் மக்கள் தெளிவாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தான் மக்கள் வாக்களிக்கப் போகிறார்கள். இப்போது இவர்களுக்கு அந்தப் பயம் வந்து விட்டது.

சில மாநிலங்களில் சி.ஏ.ஏ. சட்டத்தின் மூலம் வாக்கு பெற முடியும் என்பது, ‘மதத்தின் அடிப்படையில் மக்கள் முட்டாளாக இருக்கிறார்கள்’ என்பதை இது ஒத்துக்கொள்வதற்குச் சமம். மதத்தின் அடிப்படையில் மக்கள் முட்டாளாக இல்லை.

இந்த சி.ஏ.ஏ. சட்டத்தின் மூலம் வெளிநாட்டில் இருந்து இந்துக்களை அழைத்து வரப்போவதாக சொல்கிறார்கள், ஆனால் உள் நாட்டில் உள்ள இந்துக்களின் நிலை என்ன.? வாழ்வதற்கு வீடு இல்லாமல் இருக்கிறார்கள். சாப்பிடுவதற்கு உணவுக்கு காசு கொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மதத்தின் அடிப்படையில் ஒட்டுப்போட்டு விடுவார்கள் என்றால் மக்களை முட்டாள்களாகக் கருதுவதின் வெளிப்பாடு அது. மக்கள் முட்டாள் அல்ல, அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

மக்களாகிய நாம் இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ‘எல்லோரும் சமம்’ என்று யார் சொன்னார்கள்? ஏன் தாத்தா, பாட்டி சொல்லவில்லை.’ இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் ‘நாம் எல்லோரும் சமம்’ என்று சொன்னது.

“சாதியின் அடிப்படையில் பிரிவது இல்லை, மதத்தின் அடிப்படையில் பிரியத் தேவையில்லை, எல்லோரும் இந்தியாவின் குடிமகனாக எல்லோரும் ஒன்றாக வாழலாம்” என்று சொல்கிறது.

ஆனால் அப்படி எல்லோரும் ஒன்றாக வாழும் போது தமிழ்நாட்டின் கன்வென்ஷன் நடக்கிறது என்று சொல்லிவிட்டு, எங்கேயோ நடப்பதற்கு இங்கே நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். உள் நாட்டிலே இவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உள் நாட்டிலே இவர்கள் பீப் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி அடித்து விரட்டுகிறார்கள். அவர்கள் கையில் வைத்து இருப்பது மட்டன், பீப்பே இல்லை, போலியாக அவர்களை அடித்துக் விரட்டினார்கள் பி.ஜே.பி.காரர்கள்.

இவ்வாறு ஊடகவியலாளர் இந்திர குமார் தேரடி விவாதத்தில் பேசினார்.




அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அத்தியூர், குருமலை, சிவநாதபுரம், கல்லாங்குளம், களங்மேடு, ஊசூர், ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அ.தி.மு.க. மற்றும் பா.ம.க. கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் 125 பேர், வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்து கொண்டனர். வேலூர் தி.மு.க. ஒன்றிய செயலாளர் சி. எல். ஞானசேகரன் உடனிருந்தார்.

### இன்று பிற்பகலில் அறிவிப்பு!

# நாடாளுமன்றத் தேர்தல் தேதி!

### தலைமைத் தேர்தல் ஆணையம் தகவல்!

புதுடெல்லி, மார்ச் 16–

நாடாளுமன்ற தேர்தல் தேதி இன்று பிற்பகல் 3 மணிக்கு அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையின் பதவிக் காலம் வரும் மே மாதத்துடன் நிறைவடைகிறது. இதைத் தொடர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டு பணிகளை துரிதப்படுத்தி உள்ளது. நாடாளுமன்ற தேர்தலுடன் ஆந்திரா, ஒடிசா, அருணாசல பிரதேசம், சிக்கிம் ஆகிய 4 மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தலும் நடைபெற உள்ளது. இதேப்போல் ஜம்மு காஷ்மீர் மாநில தேர்தல் தேதியும் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் தேதி தொடர்பாக அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனையை நிறைவு செய்துள்ள தேர்தல் ஆணையம், இன்று இறுதிக்கட்ட ஆலோசனை மேற்கொண்டது. தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையர்கள் ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர் சிங் சாந்து ஆகியோரும் பங்கேற்றனர். சுமார் ஒருமணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் தேர்தல் தேதி முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து இன்று (16.3.2024) பிற்பகல் 3 மணிக்கு தேர்தல் தேதி அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காயிதே மில்லத் கூட்டரங்கில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 87பேருக்குரூ.83,52,957லட்சத்தில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட வண்டிகளை மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி வழங்கினார். மாவட்ட கழக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில்குமார், குடியாத்தம் நகராட்சி தலைவர் சவுந்தரராஜன், ஒன்றிய செயலாளர் சி.எல்.ஞானசேகரன்,மண்டல குழு தலைவர்கள் புஷ்பலதா, வீனஸ் நரேந்திரன், அயூப்கான் மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்.